**FIRST INFORMATION REPORT** | **TAMIL NADU POLICE**

**முதல் தகவல் அறிக்கை** | INTEGRATED INVESTIGATION FORM-I

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8081627

1. District மாவட்டம் : Madurai PS: காவல்நிலையம் V & AC Year: ஆண்டு 2022 FIR No: மு.த.அ. எண் 2/2022 Date: நாள் 31.03.2022

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018. Sections பிரிவுகள்: u/s 7 of PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018

   (ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 1) 25.03.2022 at 14.30 hrs. 2) 30.03.2022 at 13.00 hrs.

   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 31.03.2022 Time நேரம் : 1700 hrs.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 31.03.2022 Time நேரம் : 1800 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் 45 KM, North west Direction.

   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Assistant Engineer, Distribution TANGEDCO, Uthapanayakanoor, Usilampatti, Madurai District.

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :

   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் Tr.K.Sasikumar (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் P. Karamani

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு Age 40/2022 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் Farmer. (g) Address : முகவரி Rediyapatti, Eravarpatti (Po), Usilampatti (Tk), Madurai District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Sakthivel, Assistant Engineer, Distribution, TANGEDCO, Uthapanayakanoor, Usilampatti, Madurai District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Attached separate Sheet pages 3 to 7 pages.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ………………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. [signature] 31/3/2022 — [signature] 31/3/2022

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
31.03.2022 at 19.00hrs.

Name: பெயர் K. KUMARAGURU
Rank: நிலை Inspector of Police, VAAC, Madurai. No. எண் ……

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 31.03.2022-ஆம் தேதி 17.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் போது, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தாலுகா, எரவார்பட்டி (அஞ்சல்), ரெட்டியபட்டி கிராமம் காராமணி மகன் திரு.K.சசிக்குமார் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புநர் K. சசிக்குமார், த/பெ.காராமணி, ரெட்டியபட்டி, எரவார்பட்டி (அஞ்சல்), உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ஐயா, நான் மதுரை மாவட்டம் உசிலம்பட்டி தாலுகா, பானாமூப்பன்பட்டி ஊராட்சி ரெட்டியபட்டி கிராமத்தில் குடும்பத்துடன் வசித்து வருகின்றேன். நான் விவசாயம் செய்து வருகின்றேன். எரவார்பட்டி கிராம சர்வே எண். 113/1, 113/12, 113/13, 113/15, 113/16, 113/17, 113/2A, 113/10 எண்களுக்கு கட்டுப்பட்ட 4.07 ஏக்கர் நிலம் எங்களுடைய பூர்வீக இடமாகும். அந்த இடமானது எனது தாய் திரவியம், தம்பி அருண்குமார், எனது சித்தப்பாக்கள் ராஜாமணி, சுப்பிரமணி மற்றும் எனது பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. இதில் எரவார்பட்டி கிராம சர்வே எண். 113/10 -ல் கட்டுப்பட்ட சுமார் 25 சென்ட் நிலத்தில் ஆழ்துளை (போர்வெல்) கிணறு ஒன்று உள்ளது. இந்த போர்வெல் மூலம் அனைத்து நிலத்திற்கும் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது. போர்வெல் கிணற்றில் மோட்டர் இணைப்புக்கு அரசால் வழங்கப்படும் விவசாய இலவச மின் இணைப்பு வேண்டி, கடந்த 25.05.2010-ஆம் தேதியன்று உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலகத்தில் கட்டணமாக ரூ.550/-ம், எனது உறவினர்கள் மற்றும் எனக்காகவும் எனது பெயரில் மனு செய்திருந்தேன். அம்மனுவின் படி உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து கடந்த 06.10.2021-ஆம் தேதியிட்ட கடிதத்தில் சுயநிதிதிட்டத்தில் ரூ.25,000/- கட்டி மின் இணைப்பு பெற முன் அறிவிப்பு கடிதம் என்னுடைய பெயருக்கு வந்தது. அதன்படி நான் மின் இணைப்பு பெற தேவையான FMB, கூட்டு பட்டா, அடங்கல், VAO அவர்களின் இட ஊர்ஜித கடிதம், நிலவரி செலுத்தியதற்கான சான்று, Certificate of Ownership of land and well,

இடத்திற்கான கூட்டுரிமை சான்று ஆகிய அசல் ஆவணங்களை தயார் செய்து கடிதம் வந்த ஒரு மாத காலத்திற்குள் உதவி மின் பொறியாளர், உத்தப்பநாயக்கனூர் அலுவலகத்தில் AE திரு.சக்திவேல் அவர்களிடம் கொடுத்தேன். அசல் ஆவணங்களை பெற்றுக்கொண்டு AE திரு.சக்திவேல் அவர்கள் சீனியாரிட்டி அடிப்படையில் மின் இணைப்பு கொடுத்து வருகிறோம். நான் உங்களிடம் செல்போனில் பேசுகிறேன் என்று கூறி என்னை அனுப்பிவிட்டார். இந்நிலையில், உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து மீண்டும் 24.12.2021-ஆம் தேதியிட்ட கடிதத்தில் சாதாரண வரிசையின் படி விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு இலவச மின் இணைப்பு வழங்க எனக்கு முன்உரிமை கொடுக்கப்பட்டிருப்பதாக கூறப்பட்டிருந்தது. அதுசம்மந்தமாக நான் கடந்த 2022-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் உத்தப்பநாயக்கனூர் உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு சென்று உதவி மின் பொறியாளர் திரு.சக்திவேல் அவர்களிடம் கடிதத்தை காண்பித்து மேலும், என்னுடைய பாஸ்போர்ட் சைஸ் போட்டோவை கொடுத்தேன். அவர் அந்த போட்டோவை ஒரு பதிவேட்டில் ஒட்டி என்னிடம் கையெழுத்து பெற்றார். அதன்பின்பு 23.03.2022 தேதியன்று காலை சுமார் 11 மணியளவில் என்னுடைய மொபைல் எண்ணான 9789494467 எண்ணிற்கு 9445852882 என்ற எண்ணிலிருந்து உத்தப்பநாயக்கனூர் A.E. பேசுவதாகவும், இலவச மின் இணைப்பு விசயமாக EE உசிலம்பட்டி அவர்களை பார்த்துவிட்டு, என்னை வந்து பாருங்கள் என்று என்னிடம் கூறினார். நானும் மறுநாள் 24.03.2022 தேதியன்று மதியம் சுமார் 12 மணியளவில் உசிலம்பட்டி சென்று EE திரு.அழகுமணிமாறன் அவர்களை போய் பார்த்தேன். அவர் சீக்கரமாக கனெக்சன் கொடுக்க சொல்கிறேன் நீங்க A.E -யை போய் பாருங்கள் என்று கூறி அனுப்பிவிட்டார். உடனே நான் நேராக உத்தப்பநாயக்கனூர் சென்று A.E. திரு.சக்திவேல் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து அன்றையதினம் மதியம் சுமார் 1 ½ மணிக்கு பார்த்து, இலவச மின் இணைப்பு சம்பந்தமாக கேட்டேன். அதற்கு இலவச மின் இணைப்பு கொடுக்க நிறைய செலவாகும், நீங்க போங்க, நான் உங்க இடத்திற்கு வருகிறேன் என்று என்னிடம் கூறினார். பின்பு அன்று மாலை AE

அலுவலகத்திலிருந்து போர்மேன் திரு.முருகேசன் மற்றும் C.I. திரு.ஜெயராஜ் ஆகிய இருவரும் என்னுடைய நிலத்திற்கு வந்து, அளந்து, வரைபடம் தயார் செய்தார்கள். பின்னர் அவர்கள் AE அவர்களை மறுநாள் வந்து பார்க்கும்படி கூறிவிட்டு சென்றுவிட்டார்கள். பின்பு நான் 25.03.2022 தேதியன்று காலை சுமார் 11 மணியளவில் AE திரு. சக்திவேல் அவர்களை அவரது அலுவலகத்தில் வைத்து சந்தித்து மின் இணைப்பு சம்பந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நேத்து நான் உங்க இடத்திற்கு வரமுடியலை. அதனால் என்னுடைய அலுவலர்கள் வந்து பார்த்துவிட்டு அளவீடு செய்துள்ளனர். இப்ப நீங்க முன்னாடி போங்க, நான் நேரில் வந்து பாத்துட்டு சொல்றேன் என்று என்னிடம் கூறி அனுப்பி விட்டார். அதன்படி மதியம் சுமார் 2 ½ மணியளவில் A.E சக்திவேல், போர்மேன் முருகேசன், C.I. ஜெயராஜ் ஆகிய மூன்று பேரும் வந்து இடத்தை பார்த்துவிட்டு, A.E சக்திவேல் அவர்கள் என்னை தனியாக அழைத்துச் சென்று உங்க இடத்திற்கு கனெக்ஷன் கொடுக்க, ஒரு போஸ்ட் நடவேண்டும் என்று என்னிடம் கூறினார். அப்போது நான் போஸ்ட்க்கு நான் பணம் ஏதும் கட்டணுமா என்று கேட்டேன். அதற்கு அவர், பணம் ஏதும் கட்ட தேவையில்லை என்று கூறினார். ஆனால் கனெக்ஷன் கொடுக்க எனக்கு ரூ.40,000/- கொடுக்க வேண்டும் என்று என்னிடம் கூறினார். அதற்கு நான் இலவச கரண்ட்தான் சார், எதுக்கு இவ்வளவு ரூபாய் கொடுக்கணும் என்று கேட்டேன். அதற்கு அவர் கவர்மெண்ட்க்கு பணம் ஏதும் கட்ட வேணாம், ஆனா எனது செலவுக்காக ரூபாய் நாற்பதாயிரம் கொடுத்தால்தான் நான் கனெக்ஷன் கொடுப்பேன் என்று என்னிடம் கராராக கூறினார். அதற்கு நான் எங்க இடத்தின் பங்குதாரர்களான சித்தப்பா, அம்மாகிட்ட கேட்டு சொல்றேன் என்று கூறிவிட்டேன். இதுசம்மந்தமாக எனது உறவினர்களிடம் கலந்து பேசி AE ரூபாய் நாற்பாதாயிரம் கேட்ட விபரத்தை சொன்னேன். அவர்களும் அதனை கேட்டு வருத்தப்பட்டு குறைத்து கேட்கும்படி கூறினார்கள். அதன்படி நான் 30.03.2022 தேதியன்று மதியம் சுமார் 1 மணியளவில் உத்தப்பநாயக்கனூர் AE அலுவலகத்திற்கு சென்று AE திரு.சக்திவேல் அவர்களை சந்தித்து என்னுடைய மின் இணைப்பு சம்பந்தமாக மீண்டும் கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் நாற்பாயிரத்தை ரெடி

பண்ணிடீங்களா என்று என்னிடம் கேட்டார். அதற்கு நான் தற்போது விவசாயம் சரியாக இல்லை, அதனால் நாற்பாயிரம் ரூபாய் அதிகமாக இருக்குன்னு வீட்ல எல்லாரும் சொல்றாங்க. கொஞ்சம் கொறைச்சு சொல்லுங்க சார் என்று கூறினேன். அதற்கு அவர் உங்களுக்காக வேணா நான் ஐந்தாயிரம் கொறைச்சுகிறேன் என்று கூறினார். நான் இது அஞ்சு பேரு பங்கு சார், எல்லாருமே என்னமாதிரி பணம் புரட்ட முடியாது, பாத்து செய்யுங்க சார் என்று கெஞ்சி கேட்டேன். உடனே அவர்கள் அஞ்சு பேரு சேர்ந்து கொடுக்க முடியாதா, சரி பத்தாயிரம் கொறைச்சு, முப்பதாயிரமா கொடுத்ததான் நான் கனெக்ஷன் கொடுப்பேன் என்றும், மேலும், அவர் கேட்ட பணம் ரூபாய் 30,000/-த்தை வெள்ளிக்கிழமை காலை கொண்டு வா என்று கண்டிப்பாக கூறினார். நானும் வெள்ளிக்கிழமை ரூபாயுடன் வருவதாக கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்பு பண விஷயத்தை வீட்டில் சொல்ல அவர்களும் வருத்தப்பட்டார்கள். அரசு இலவசமாக கொடுக்கும் கரண்டுக்கு, எதுக்கு லஞ்சமாக ரூ.30,000/-ம் கொடுக்கணும் என்று யோசித்து, A.E. சக்திவேலுக்கு அவர் கேட்ட லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. இலவச மின் இணைப்பு கொடுக்க முப்பதாயிரம் லஞ்சம் கேட்கும் உத்தப்பநாயக்கனூர் AE திரு. சக்திவேல் மீது சட்டப் பூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். மேலும், AE திரு.சக்திவேல் அவர்கள் கேட்ட லஞ்சப்பணம் ரூ.30,000/-த்தை வைத்துள்ளேன். மேலும் எனது தாய் திரவியம், தம்பி அருண்குமார், எனது சித்தப்பாக்கள் ராஜாமணி, சுப்பிரமணி மற்றும் எனது பெயரில் உள்ள கூட்டு பட்டா, அந்த நிலங்களின் வரைபடம் (FMB), உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலகத்தில் இலவச விவசாய மின் இணைப்பு விண்ணப்பம் கொடுத்ததற்கு அளித்த ஒப்புகை கடிதம், உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலக சுயநிதிதிட்டம் ரூ.25,000/- மின் இணைப்பு பெற முன் அறிவிப்பு கடிதம், நாள்: 06.10.2021, உசிலம்பட்டி மின் செயற்பொறியாளர் அலுவலகத்திலிருந்து சாதாரண வரிசையின் படி விவசாய மோட்டார் பம்ப் செட்டிற்கு மின் இணைப்பு வழங்க தயார் நிலை அறிவிப்பு கடிதம், நாள்: 24.12.2021 ஆகியவற்றின் நகல்களையும் எனது புகார் மனுவுடன் இணைத்துள்ளேன். அதன் பேரில், அரசு இலவசமாக வழங்கும் விவசாய மின்

இணைப்பைக் கொடுப்பதற்கு என்னிடம் ரூ.30,000/-ம் லஞ்சம் கேட்கும் உத்தப்பநாயக்கனூர் உதவி மின் பொறியாளர் திரு. சக்திவேல் அவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) XXXXXX (K.சசிக்குமார்), 31.03.2022.

**Sir, Received the written complaint on 31.03.2022 at 17.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 02/2022 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 18.00 hrs and took up investigation. Sd./-XXXXXX (K.Kumaraguru) 31.03.2022, Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of Tr. K.Sasikumar, S/o Karamani, Rediyapatti, Eravarpatti (Post), Usilampatti Taluk, Madurai District along with Xerox copies of Joint Patta, FMB, Acknowledgment Certificate, dated 25.03.2010, Two Letters of Executive Engineer, TANGEDCO, Usilampatti, dated 06.10.2021 and 24.12.2021 are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

31/3/2022

**(K.Kumaraguru)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**